**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

****************

**ஊடக அறிக்கை**

**ரவீந்திரநாத் தாகூரின் பிறந்த தின நினைவு இலங்கையில் அனுஷ்டிப்பு**

நோபல் பரிசு பெற்ற குருதேவ் ரவீந்திரநாத் தாகூர் அவர்களின் 159 ஆவது பிறந்ததின நினைவு நாளில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக இலங்கை மற்றும் இந்திய கலைஞர்கள் ஒன்றிணைந்து இணையவழி மூலமான ஆற்றுகை தொடர் ஒன்றினை வழங்கியிருந்தார்கள். இலங்கைக்கான பிரதி உயர் ஸ்தானிகர் திரு . வினோத் கே ஜேக்கப் அவர்கள் மே மாதம் 08 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வினை குருதேவ் அவர்களின் உருவப்படத்திற்கு மலர்மாலை சூட்டுவித்து நிகழ்வுக்கு தலைமை தாங்கியிருந்தார்.

2. தனது புதிய பதவியினை பொறுப்பேற்பதற்காக கடந்த 08 ஆம் திகதி கொழும்புக்கு வருகை தந்திருக்கும் இலங்கைக்கான புதிய இந்திய உயர் ஸ்தானிகரின் செய்தியினை பிரதி உயர் ஸ்தானிகர் இந்நிகழ்வில் வாசித்தார் . அச்செய்தியில் தனது வாழ்த்துக்களை பகிர்ந்துகொண்ட புதிய உயர் ஸ்தானிகர், ஒட்டுமொத்த மனிதர்களுக்காகவும் குருதேவ் அவர்கள் தனது பணிகள் மற்றும் தொலைநோக்கு ஆகியவற்றின் மூலம் முன்வைத்த உயர்வான பாரம்பரியம் தொடர்பாகவும் சுட்டிக்காட்டியிருந்தார் . ஸ்வாமி இராமகிருஷ்ண பரமஹன்சர், சுவாமி விவேகானந்தர் , மற்றும் குருதேவ் உள்ளிட்ட மகான்களின் வாழ்க்கை மற்றும் படைப்புகளின் மூலமாக 19 - 20 ஆம் நூற்றாண்டில் வங்காளத்திலிருந்து பிரகாசித்த ஒளியின் வாரிசுகள் என அனைத்து இந்தியர்களும் பெருமை கொள்வதையும் புதிய இந்திய தூதுவர் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் விலைமதிப்பற்ற பாரம்பரியத்தை பாதுகாக்கவும் ஊக்குவிக்கவும் மேற்கொள்ளப்பட்ட ஸ்திரமான முயற்சிகள் குறித்தும் அவர் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

3. குருதேவ் தாகூர் இலங்கையுடனும் அந்நாட்டு மக்களுடனும் நீண்ட தொடர்பைக் கொண்டிருந்தார். 1922, 1928 மற்றும் 1934 ஆம் ஆண்டுகளில் அவர் தனது வாழ்நாளில் மூன்று தடவைகள், இலங்கைக்கு விஜயம் செய்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக-கலாசார உறவில் ஸ்திரமானதும் வலுவானதுமான பிரதிபலிப்பை அவர் ஏற்படுத்தினார். அவரது இறுதி வெளிநாட்டு விஜயம் இலங்கைக்கு வருகை தந்ததாகவே அமைந்திருந்தது. குருதேவ் நிறுவிய சாந்திநிகேதனில் உள்ள விஸ்வ பாரதி பல்கலைக்கழகம், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார தொடர்புகளை வலுவாக்க பெரிதும் பங்களிப்பு செய்த ஆனந்த சமரகோன் உட்பட பல இலங்கை கலைஞர்களையும் அறிஞர்களையும் தொடர்ந்து கவர்ந்து வருகிறது . குருதேவின் இலங்கையுடனான ஆழமான உறவை நினைவுகூரும் வகையில் , இலங்கையில் மிகப்பெரிய பல்கலைக்கழக கேட்போர்கூடம் இந்திய நிதி உதவியுடன் ருஹுணு பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டதுடன் 1500 இருக்கைகள் கொண்ட இந்த கேட்போர்கூடத்துக்கு ரவீந்திரநாத் தாகூர் ஞாபகார்த்த கேட்போர் கூடமென பெயரிடப்பட்டது.

4. இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தர் கலாசார நிலையமும் அதன் பல்வேறு சமூக ஊடக தளங்களில் இணையவழி மூலம் ஆவணத்தொகுப்புக்களை திரையிட்டிருந்தது.

*****

கொழும்பு

09 மே 2020